# Royal College - Colombo 07
# றோயல் கல்லூரி - கொழும்பு 07

## Grade 9 – Third term Test –2022 (March 2023)
## தரம் 9 - மூன்றாம் தவணை பரீட்சை – (மார்ச் 2023)

**கணிதம் - *Mathematics***

பெயர் ____________ சுட்டெண் : ____________ நேரம் : 2 மணித்தியாலம்

- 1-20 வரையான வினாக்களுக்கு இத்தாளிலேயே விடை எழுதுக
- ஒவ்வொரு வினாவிற்க்கும் 2 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்

www.e-kalvi.com

### பகுதி 1

**1.** சுருக்கி எளிய வடிவில் தருக. $\frac{5}{8} \times \frac{4}{5}$

**2.** எண்கோலம் ஒன்றின் பொது உறுப்பு $T_n = 2n + \frac{3}{2}$ எனில் 31.5 எத்தனையாம் உறுப்பு.

**3.** சுருக்குக

$1101_2 + 1101_2 + 11_2$


**4.** கீதாவின் தந்தையாரின் மாத வருமானம் ரூபா60000 ஆகும். அவர் அதில் $\frac{3}{5}$ பங்கை உணவிற்கு செலவு செய்தார் எனின் உணவிற்கு செலவு செய்த பெறுமானத்தை ரூபாவில் காண்க.

**5.** $x = -2, y = -{}^{1}/_{3}$ எனின் $2x + 3y$ இன் பெறுமானத்தைக் காண்க.


**6.** கீழே தரப்பட்ட சமனிலியை தீர்த்து நிறைவெண் தீர்வுகளை எண்கோட்டில் குறித்துக் காட்டுக

$x + 2 > 3$


**7.** தொடை $A \cup B$ இல் உள்ள மூலகங்களை எழுதுக.



**8.** இணைகரம் $ABCD$ இன் பரப்பளவைக் காண்க.




**9.** தரப்பட்ட வட்டத்தின் விட்டத்தின் நீளத்தைக் காண்க.




**10.** சுருக்கி விடையை நேர்ச்சுட்டியில் தருக.

$$\frac{3a^{-2} \times a}{2a^{-3}}$$


**11.** சுருக்குக.

$$\left(\frac{7}{12} + \frac{1}{12}\right) \div 1\frac{1}{5}$$

**12.** $2.032 \times 10^4$ என்ற எண்ணை சாதாரண வடிவில் தருக.

**13.** கனவுரு வடிவ பாத்திரம் ஒன்றின் அடிப்பரப்பு $30\ cm^2$ உம் கொள்ளளவு $150ml$ எனின் அதன் உயரத்தைக் காண்க.

**14.** தரப்பட்ட உருவிற்கு அமைய $x$ இன் பெறுமானத்தைக் காண்க.





**15.** $v^2$ ஐ எழுவாயாக மாற்றுக.

$$\frac{v^2 - u^2}{2a} = s$$

www.e-kalvi.com

**16.** ஒழுங்கான அறுகோணி ஒன்றின் அகக்கோணம் ஒன்றின் பெறுமானத்தை கண்டு அதிலிருந்து புறக்கோணம் ஒன்றின் பெறுமதியைக் காண்க.


**17.** கோணம் $a$ இனை காண்க




**18.** சுருக்குக.

$$\frac{2a}{7a-2} - \frac{a}{7a-2}$$

**19.** தரப்பட்ட உருவிற்கு அமைய $A$ இலிருந்து $B$ இன் திசைகோளைக் காண்க.




**20.** தரப்பட்ட தரவுகளின் இடையத்தைக் காண்க
24,0,18,26,25,32,17

www.e-kalvi.com

## பகுதி II

**முதலாம்** வினாவுக்கும் **ஏனைய 4** வினாக்களுக்கும் விடை தருக
முதலாம் வினா 16 புள்ளிகளையும் ஏனைய ஒவ்வொரு வினாக்களும் 11 புள்ளிகளையும் கொண்டவை

**1.** சதவீதம் தொடர்பாக வகுப்பில் கற்ற விடயங்களை கருதி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**a)** இலாபம், நட்டம் என்னும் பதத்தை விளக்குக.

**b)** சுந்தர் புத்தக கடை ஒன்றிற்குச் சென்று அங்கு 25% கழிவு குறிப்பிடப்பட்ட புத்தகங்களை கொள்வனவு செய்தார்.

**i.** ரூபா 1050 என குறிக்கப்பட்ட புத்தகம் ஒன்றிற்கு வழங்கப்பட்ட கழிவைக் காண்க.

**ii.** கழிவின் பின் அவர் புத்தகத்திற்கு செலுத்திய தொகையைக் காண்க.


**c)** ரூபா 1 000 000 பெறுமதியுள்ள வாகனம் ஒன்று இறக்குமதி செய்யப்படும் போது தீர்வை வரியாக 70% அறவிடப்படும்.

**i.** தீர்வையாக அறவிடப்பட்ட பெறுமதியைக் காண்க.

**ii.** தீர்வையின் பின் வாகனத்தின் பெறுமதியை காண்க.

**2.**

a) $PQ, RS$ எனும் நேர்கோடுகள், புள்ளி $T$ இல் இடைவெட்டுகின்றன
வெளிப்படை உண்மை தேற்றம் என்பவற்றைப் பயன்படுத்தி குத்தெதிர் கோணங்கள் சமன் என நிறுவப்பட்ட நிறுவல் கீழே தரப்பட்டுள்ளது.




$P\hat{T}R + R\hat{T}Q =$ ________________ (நேர்கோட்டின் மீதுள்ள அடுத்துள்ள கோணங்களின் கூட்டுத்தொகை)

$R\hat{T}Q + Q\hat{T}S =$ ________________(நேர்கோட்டின் மீதுள்ள அடுத்துள்ள கோணங்களின் கூட்டுத்தொகை)

$\therefore P\hat{T}R + R\hat{T}Q = R\hat{T}Q + Q\hat{T}S$ (வெளிப்படை உண்மை)

இருபுறமும் $R\hat{T}Q$ ஐ கழிக்க

www.e-kalvi.com


$P\hat{T}R =$ ________________(வெளிப்படை உண்மை)

b)


i. தரப்பட்ட உருவில் $BD // AF$ ஆகும். அத்துடன் $C\hat{D}F = 30°, A\hat{F}D = 80°$ ஆகும். தரவுகளுக்கு அமைய $x, y, z$ இன் பெறுமானங்களைக் காண்க.

ii. $(x + y + z), (a + b + c)$ என்பவற்றிற்கு இடையேயான தொடர்புபை காண்க.

i.




ii.



**3.**

a) காரணிப்படுத்துக

i. $x^2 - 4xy$

ii. $x^2 - \frac{y^2}{9}$

iii. $x^2 + 7x + 10$

b) தரப்பட்ட சமன்பாடுகளைத் தீர்க்குக.

i. $6 + 3\{2(x+1) - 3\} = 21$

ii. $4y - 2x = 7, 2x + 2y = 5$

**4.** cm/mm அளவிடையிலுள்ள நேர்விளிம்பு, கவராயம் ஆகியவற்றை மாத்திரம் பாவித்து அமைப்புக் கோடுகளை தெளிவாக காட்டி பின்வரும் அமைப்புக்களை வரைக.

i. $XY = 7cm$ ஆகவுள்ள நேர்கோட்டுத் துண்டம் ஒன்றை அமைக்க.

ii. $XY$ ஐ பக்கமாக கொண்டு $X$ இல் கோணம் $90°$ அமைக்க.

iii. $XY$ ஐ பக்கமாக கொண்டு $Y$ இல் கோணம் $60°$ அமைக்க

iv. இரு நேர் கோடுகளும் சந்திக்கும் புள்ளியை $Z$ எனப் பெயரிடுக.

v. $XZ, XY$ ஆகிய நேர்கோடுகளிலிருந்து சமதூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுக்கை அமைக்க

vi. கோணம் $X\hat{Y}Z$ இன் கோண இரு கூறாக்கியை அமைக்க.

$(v), (vi)$ இல் அமைத்த இரு ஒழுக்குகளும் சந்திக்கும் புள்ளியை $O$ எனக் குறிப்பிடுக.

$O$இருந்து $XY$ இற்கு செங்குத்து அமைக்க

**5.** $y = 3x - 1$ எனும் வரைபை வரைவதற்கு பூரணமற்ற அட்டவனை கீழே தரப்பட்டுள்ளது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| x | -2 | -1 | 0 | 1 | 2 | 3 |
| y | -7 | ____ | -1 | 2 | ____ | 8 |

i. $x = -1, x = 2$ ஆகும்போது $y$ இன் பெறுமானங்களைக் காண்க.

ii. பொருத்தமான அளவிடையைப் பயன்படுத்தி வரைபை வரைக.

iii. வரைபின் படித்திறன், வெட்டுத்துண்டு என்பவற்றைக் காண்க.

iv. $y = 3x - 1$ என்னும் வரைபிற்கு சமாந்தரமாகவும் வெட்டுத்துண்டு $+2$ ஐ உடைய வரைபின் சமன்பாட்டைக்காண்க

v. $(7,20)$ என்னும் புள்ளி $y = 3x - 1$ என்னும் வரைபில் அமையுமா? காரணம் தருக

www.e-kalvi.com

**6.**

a) சமபேறுடைய இரு நிகழ்வுகளை குறிப்பிடுக.

b) $S = \{1$தொடக்கம் $10$ வரையான முழு எண்கள்$\}$
$A = \{1$தொடக்கம் $10$ வரையான ஒற்றை எண்கள்$\}$
$B = \{1$தொடக்கம் $10$ வரையான முக்கோண எண்கள்$\}$

i. மேலே தரப்பட்ட தொடையை மூலகங்களாக தருக
ii. மேலே தரப்பட்ட தொடையை வென்வரிபடத்தில் குறிப்பிடுக.

c) ஒரு பையில் 3 சிவப்பு மாபிள்களும், 2 மஞ்சள் மாபிள்களும், ஒரு பச்சைமாபிளும் உள்ளன. எழுமாறாக ஒரு மாபிள் எடுக்கப்பட்டு அதன் நிறம் குறிக்கப்படும்.
எடுக்கப்படும் மாபிள்

i. சிவப்பு நிறமாக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.
ii. மஞ்சள் அல்லது பச்சை நிறமாக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

**7.** தேக்கு மரத்தண்டின் சுற்றளவு தொடர்பான தரவுகள் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| தேக்கு மரத்தண்டின் சுற்றளவு$(cm)$ | தேக்குமரங்களின் எண்ணிக்கை $f$ | $fx$ |
|---|---|---|
| 62 | 5 | 210 |
| 65 | 6 | 390 |
| 68 | 4 | |
| 72 | 2 | 144 |
| 75 | 2 | |
| 80 | 1 | 80 |
| | மொத்தம் | மொத்தம் |

i. தரப்பட்ட தரவுத்தொகுதியின் வீச்சைக் காண்க
ii. மேலே தரப்பட்ட தரவுகளுக்கு அமைய கூட்டமாக்கப்படாத மீடிறன் பரம்பல் ஒன்று மேலே தரப்பட்டுள்ளது. அதனை உமது விடைத்தாளில் பிரதி செய்து பூர்த்தியாக்குக.
iii. நிரல் $fx$ இன் கூட்டுத்தொகையைக் காண்க
iv. மேலே தரப்பட்ட பரம்பலின் இடையைக் காண்க.

www.e-kalvi.com